R-1eg. No. M.

போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜெட்

I-வது பாகத்தின் ஸப்ளிமென்ட்.

SUPPLEMENT TO PART I OF THE FORT ST. GEORGE GAZETTE.

OCTOBER 14, 1930.

ந. 41.] மதராஸ்: செவ்வாய்கிழமை மாலை, 1930-ம்௵ அக்டோபர்௴ 14உ. [PRICE, 6 pies.

கவர்ன்மெண்ட் விளம்பரங்களின் தமிழ் மொழிபெயர்ப்பு.

Tamil Translation of Notifications by Government.

பைனான்ஸ் டிபார்ட்மெண்ட்.

(மரீன்.)

விளம்பரம்.

போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ், 1930-ம்௵ ஸெப்டெம்பர்௴ 16உ (மிஸலேனியஸ், 471-ம் ந. கவர்ன்மெண்ட் உத்தரவு).

நெ. 82.—இந்தியா கவர்ன்மெண்டார் சமாசாரப் பத்திரிகைகளுக்காக வெளியிட்ட அடியிற்கண்ட அறிக்கை மீண்டும் பிரசித்தம் செய்யப்படுகிறது:—

லெஜிஸ்லெடிவ் டிபார்ட்மெண்ட்.

சமாதான உடன்படிக்கை.

ஸிம்லா, 1930-ம்௵ ஆகஸ்ட்௴ 20உ.

மகாயுத்தம் நடந்துகொண்டிருந்தபோது குறித்த ஓரிடத்தில் அடைத்துவைக்கப்பட்டோ அல்லது தங்களுடைய கப்பல்கள் முழுக்கடிக்கப்பட்டோ எதிரிகளின் நடவடிக்கைகளினால் கஷ்டமடைந்த மாலுமிகள் சில சந்தர்ப்பங்களில் பிரதிபலன் பெற அர்ஹர்களாயிருக்கிறார்களென்பது விஷயமாய் இந்தியா கவர்ன்மெண்டார் சம்பந்தப்பட்ட சகலருக்கும் முடிவான திட்டங்கள் பிறப்பிக்க விரும்புகிறார்கள். தமக்குப் பிரதிபலன் கொடுக்கவேண்டுமென்று சுதந்தரித்துக் கேட்பவர் - தாம் அடைத்து வைக்கப்பட்டதற்கு முன்பாவது தம்முடைய கப்பல் முழுக்கடிக்கப்பட்டதற்கு முன்பாவது கடைசியாய் எந்த ரேவில் தாம் வேலையில் அமர்ந்திருந்தாரோ அந்த ரேவின் ஷிப்பிங் மாஸ்டரிடம் அது விஷயமாய் மனு செய்து கொள்ளவேண்டும். 1931-ம்௵ மார்ச்௴ 31உக்கு மேற்படாமல் அந்தப்படி மனு செய்து கொள்ளவேண்டும்; மேலும், மேலேகண்ட பிரதிபலன் விஷயமாய் ஷை தேதிக்குப் பிறகு செய்துகொள்ளப்படும் எந்த மனுவும் ஆலோசிக்கப்படமாட்டாதென்று சம்பந்தப்பட்ட சகலருக்கும் இதனால் தெரிவிக்கப்படுகிறது. கடற்கரைப் பிரதேச மாகாணங்களிலும் பஞ்சாபிலும் வெளியாகும் சுதேச பாஷைப் பத்திரிகைகளில் இந்த விளம்பரத்தை மீண்டும் பிரசுரிக்கும்படி முக்கியமாய்க் கேட்டுக்கொள்ளலாகிறது.

எச். ஏ. வாட்ஸன்,
கவர்ன்மெண்ட் ஸெக்ரெடரி.

லா டிபார்ட்மெண்ட்.

(ஜெனரல்.)

விளம்பரங்கள்.

போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ், 1930-ம்௵ அக்டோபர்௴ 7உ.

நெ. 815.—(1914-ம்௵த்து 8-வது ஆக்டாகிய) 1914-ம்௵த்திய இந்துதேசத்து மோடார் வண்டிகளாக்ட் 11-வது பிரிவின்படி கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு, ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்

கள் - 1923-ம்௵ மார்ச்௴ 20௳யுள்ள **போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்** I-ம் பாகத்தின் 327-வது பக்கத்திலும் அதற்கு அடுத்த பக்கங்களிலும் (இங்கிலீஷில்) பிரசுரிக்கப்பட்டிருக்கும் லா டிபார்ட்மென்டில் பிறந்த 209-ம் நெ. விளம்பரத்தில் பிரசித்தம் செய்யப்பட்டுள்ள 1923-ம்௵த்திய சென்னபட்டணத்து மோடார் வண்டிகளைக்குறித்த விதிகளில் செய்யும்படி அடியிற்கண்ட திருத்தங்களைக் களிகூர்ந்து வெளிவிடுகிறார்கள் :—

திருத்தங்கள்.

I

அடியிற்கண்டதை 6-A விதியாக **அமைத்துக்கொள்ளவும் ;—**

"யாதொரு மோடார் வண்டியின் ரெஜிஸ்டரான சொந்தக்காரர் ஒவ்வொருவரும் - அந்த வண்டியின் என்ஜின் (block) ப்ளாக்கிலாவது ஷாஸி என்னும் அடிச்சட்டத்திலாவது செய்யும் எந்த மாறுதலைக்குறித்தும், அந்த வண்டியை ரெஜிஸ்டர்செய்த அதிகாரிக்கு உடனேதெரிவிக்கவேண்டும்."

II

அடியிற்கண்டதை 'C' நமூனாவைச் சேர்ந்த '**குறிப்பு 4**' ஆக **அமைத்துக்கொள்ளவும் :—**

"யாதொரு மோடார் வண்டியின் ரெஜிஸ்டரான சொந்தக்காரர் ஒவ்வொருவரும் - அந்த வண்டியின் என்ஜின் ப்ளாக்கிலாவது ஷாஸி என்னும் அடிச்சட்டத்திலாவது செய்யும் எந்த மாறுதலைக்குறித்தும், அந்த வண்டியை ரெஜிஸ்டர்செய்த அதிகாரிக்கு உடனே தெரிவிக்கவேண்டும்."

நெ.816 .—(1914-ம்௵த்து 8-வது ஆக்டாகிய) 1914-ம்௵த்திய இந்துதேசத்து மோடார் வண்டிகளாக்ட் 11-வது பிரிவின்படி கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு, ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் - 1923-ம்௵ மார்ச்௴ 20௳யுள்ள **போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்** I-ம் பாகத்தின் 327-வது பக்கத்திலும் அதற்கு அடுத்த பக்கங்களிலும் (இங்கிலீஷில்) பிரசுரிக்கப்பட்டிருக்கும் லா டிபார்ட்மென்டில் பிறந்த 209-ம்நெ. விளம்பரத்தில் பிரசித்தம் செய்யப்பட்டுள்ள 1923-ம்௵த்திய சென்னபட்டணத்து மோடார் வண்டிகளைக்குறித்த விதிகளில் செய்யும்படி அடியிற்கண்ட திருத்தத்தைக் களிகூர்ந்து வெளிவிடுகிறார்கள் :—

திருத்தம்.

'G' அனுமதிச்சீட்டில் அடியிற்கண்டதை (2-C) குறிப்பிட்ட திட்டமாக **அமைத்துக்கொள்ளவும் :—**

"(2-C) மோடார் லாரியல்லாத வேறே யாதொரு மோடார் வண்டி ஓட்டுகிறவராவது அதன் கண்டக்டராவது - அதில் யாதொரு வெடிக்கத்தக்க வஸ்துவைக் கொண்டுபோகவாகிலும் கொண்டுபோக அனுமதி கொடுக்கவாகிலும் கூடாது. (வண்டி) ஓட்டுகிறவர், கண்டக்டர் ஆகிய இவ்விருவரும் இந்த திட்டத்தைக் கிரமப்படி அனுசரிப்பதற்கு உத்தரவாதியாவார்கள் :

ஆனால், சிறு ஆயுதங்களுக்காக பத்திரமாய் சிப்பங்கட்டப்பட்டு அப்படிப்பட்ட மோடார் வண்டி எதிலாவது யாதொரு பிரயாணி தன்னோடு கொண்டுபோகக்கூடிய தோட்டாக்களுக்கு இந்த திட்டத்தில் கண்டதெதுவும் பிரயோகப்படமாட்டாது."

ஏ. எப். டபில்யு. டிக்ஸன்,
கவர்ன்மென்ட் டெப்யுடி ஸெக்ரெடரி.

(**A** true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.